**பன்வில பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 05 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பளியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பன்வில பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சேர்ப்புப் பதிவேட்டின் பிரகாரம், ரூபா 1,347,975 இற்கான நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 1,178,098 தொகை என கணக்குகளில் காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 169,877 தொகையினால் கணக்குகளில் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் சபையினால் நேரடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைகளுக்காக வழங்கப்பட்டிருந்த பணத்தில் இருந்து ஆண்டின் போது செலவிடப்படாத ரூபா 2,642,216 இற்கான தொகையொன்று கடன்கொடுத்தோர் என காட்டப்பட்டிருந்தது.

1.3.2 பெற வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 17,480,045 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,330,128 ஆக காணப்பட்டது.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 390,146 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,157,352 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 767,206 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

(அ) மீளாய்வாண்டிற்கான சம்பளம் மற்றும் படிகள் என ரூபா 10,834,201 தொகை சபையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் மத்திய மாகாண சபையினால் மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது ரூபா 9,608,068 தொகை மாத்திரமே. இதன் பிரகாரம் நிலுவைச் சம்பள மீளளிப்பு ரூபா 1,226,133 தொகையினை சபையின் மீண்டுவரும் வருமானத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) ஆதனக் கடன் வட்டிக்காக மீளாய்வாண்டின் போது, செலுத்தியிருந்த தொகை ரூபா 77,872 ஆக காணப்பட்ட போதிலும், மாகாண சபையினால் மீளளிப்பு செய்திருந்த தொகை அவற்றில் ரூபா 58,884 மாத்திரமே. அதற்கான நிலுவைத் தொகை ரூபா 18,988 இனை மிகைக்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

2.3 வருமான நிருவாகம்

2.3.1 வீத வரி

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 529,490 இற்கான மீதியொன்று காணப்பட்டதுடன், அம் மீதியில் 2015 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 290,103 தொகை ஒன்று மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. அந்த நிலுவை தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158 இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3.2 வாடகை

(அ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 137,842 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டதுடன் அவற்றில் ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்த தொகை ரூபா 79,984 மாத்திரமே. அவை சதவீதமாக நூற்றிற்கு 58 ஆகும். ஆண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 159,533 தொகை ஆக காணப்பட்டது. அம் மீதியில் 2015 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 122,087 இற்கான மீதியொன்று மேலும் நிலுவையாக காணப்பட்டது.

(ஆ) சபைக்குச் சொந்தமான கடைகளில் வாடகையாளர்களினால் துணை வாடகையாளர்களுக்கு சாட்டப்பட்டிருந்த சந்தர்ப்பங்களில் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து, மீண்டும் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல், அக் கடைகளின் உரிமையை துணை வாடகையாளர்களுக்கு சாட்டுதல் செய்வதற்கும் அத் துணை வாடகையாளர்களிடம் ரூபா 580,000 இற்கான வைப்புப் பணத்தை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.3.3 சுற்றாடல் அனுமதிப் பத்திரக் கட்டணம்

2000 இன் 53 ஆம் இலக்க மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களில் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டம் மற்றும் அதன் கீழ் ஆக்கப்பட்டுள்ள பிரமாணங்களுக்க இணங்க இலக்கம் 1533/16 கொண்ட 2008 ஜனவரி 25 ஆம் திகதி அதி விஷேட வர்த்தமானி அறிவித்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் 22 தொழில் முயற்சிகள் முறைசாரா விதமாக நடத்தப்பட்டிருந்தன. 2014 ஆண்டின் போது அவற்றில் மூலம் சபை இழந்துள்ள வருமானம் ரூபா 80,000 ஆகும்.

2.3.4 வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டின் போது இலங்கை உல்லாசப் பிரயாண சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள மடுல்கலே ஹோட்டல் ஒன்றில் இருந்து மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 672,832 இற்கான வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் (நூற்றிற்கு 1 இற்கான) அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் அவற்றில் 2015 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 336,416 இற்கான மீதியொன்று மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

2.3.5 ஏக்கர் வரி

---------------------

மீளாய்வாண்டிற்கான ஆரம்ப நிலுவை ரூபா 33,646 ஆக காணப்பட்டதுடன் ஆண்டின் போது சிட்டையிடப்பட்டவை ரூபா 39,808 ஆகும். அவ் வருமான அறவீடுகள் முறையே ரூபா 6,491 மற்றும் ரூபா 15,987 ஆக காணப்பட்டதுடன் அவை சதவீதமாக முறையே நூற்றிற்கு 19 மற்றும் நூற்றிற்கு 40 ஆக காணப்பட்டது. மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 50,976 ஆகக் காணப்பட்டது. அம் மீதித் தொகையில் 2015 ஜுன் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 35,198 இற்கான மீதியொன்று மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

2.3.6 நீதி மன்றத் தண்டம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 233,470 தொகையொன்று பெறவேண்டியிருந்தது. இந்த மீதியில் 2015 ஜுன் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 22,520 மீதியொன்று மேலும் பெற வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

--------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை அனுப்பப்படாமையால், 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட தொகை ரூபா 357,127 ஆகும். அம் மீதியில் 2015 ஜுன் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 277,127 மீதியொன்று மேலும் செலுத்தப்பட வேண்டியிருந்தது.

(ஆ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அங்கீகாரம் இன்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த 05 செலுத்துகை டவர்கள் தொடர்பாக முறையான செயற்பாடு ஒன்று கடைபிடித்திருக்கவில்லை.

(இ) செலுத்துகை டவர்கள் மூலம் தொலை தொடர்பு வசதிகள் வழங்கியிருந்த கம்பனிகளில் இருந்து வருடாந்தம் வர்த்தக வரி அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 07 கம்பனிகளில் இருந்து குறைந்த பட்சம் ரூபா 30,000 தொகை அறவீடு செய்திருக்கவில்லை.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கோப்பில் 48 பதவிகளில் 08 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவற்றை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

-------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2006 முதல் 2014 இடைப்பட்ட காலத்தில் சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 15,140,000 ஐ 04 வாகனங்களின் உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. அத்துடன் கணக்கீட்டு குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2014 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளின் போது இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 12 ஊழியர்கள் அலுவலர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 317,634 இற்கான கடன் மீதிகளை இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள நிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்காமல், தவணைகளாக அறவிடப்பட்டுக் காணப்பட்டது.

(இ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வர்த்தக வாணிப மற்றும் உல்லாசப் பிரயாணத் திணைக்களத்தில் இருந்து சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த நிருவாகச் செலவு ரூபா 15,000 தொகை 2015 மார்ச் 31 திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2013 திசெம்பர் 20 திகதிய இலக்கம் 1842 கொண்ட இலங்கை குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சிட்டை இடப்பட்டிருந்த ரூபா 81,027 இற்கான அறிவித்தல் பலகைக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு

முடியாதிருந்ததுடன், அவ் அறிவித்தல் பலகைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இம் மீதியில் 2015 ஜுன் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 50,677 தொகையொன்று மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள இரண்டு அலுவலர்களின் பிணை வைப்புக்கள் ரூபா 20,617 தொகை வருட இறுதி வரை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் போது வெளி ஏற்பாடுகளை எதிர்ப்பார்த்து நிர்மாணிக்கப்பட்டிருந்த 40 நிர்மாண வேலைகள் தொடர்பாக ரூபா 3,277,039 தொகையொன்று 2015 ஏப்ரல் 30 திகதி வரை மீளளிப்புச் செய்யப்பட்டிக்கவில்லை.

(எ) நீர்ச் செயற்திட்டத்தின் மூலம் நீர் வழங்கியிருந்த 406 இடங்களை சபையின் அதிகாரப் பிரதேசத்தில் இனங்காணப்பட்டதுடன் நீர் நுகர்வோர்களுக்காக நீர் மானிகள் பொருத்தப்பட்டு முறையாக கட்டணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஏ) சேவை இடைநிறுத்தப்பட்டுள்ள மற்றும் இடமாற்றம் பெற்றுள்ள இரண்டு அலுவலர்களிடம் ரூபா 16,237 இற்கான கடன் மீதி ஒன்று கணக்காய்வுத் திகதியாகிய 2015 மார்ச் 30 திகதி வரை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

------------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 10,075,000 தொகை பெறுமதியான 05 சொத்துக்கள் பயன்படுத்தப்படாமலும் குறை பயன்பாட்டுடனும் காணப்பட்டது.

(ஆ) உள்ளூராட்சி அமைச்சில் இருந்து 2014 திசெம்பர் 06 திகதி ரூபா 110,712 தொகை பெறுமதியான 100 கல்வணய்ஸ் குழாய்கள் (GI) வழங்கப்பட்டிருந்ததுடன், பயன்தரும் விடயம் ஒன்றிற்காக ஈடுபடுத்தாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

-----------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதில் உள்ளவாறு ரூபா 10,268 பெறுமதியான 60 நூலகப் புத்தகங்கள் பற்றாக் குறையாகக் காணப்பட்டது.

3.5 ஒப்பந்த நிருவாகம்

-----------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக வெளி அமைச்சுக்கள் கொடுப்பனவுகளை செலுத்த மறுத்திருந்த நிர்மாண வேலை தொடர்பாக ரூபா 2,610,914 இற்கான கடன்கொடுத்தோர் மீதி ஒன்று 2011 ஆண்டு முதல் முன்கொண்டுவரப்பட்டுக் காணப்பட்டது.

(ஆ) கால் நடை வளங்கள் அமைச்சின் ஏற்பாடுகளின் மீது மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தக் காரர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த இரண்டு நிர்மாண வேலைகள் தொடர்பாக பணத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த நிர்மாண வேலைகளின் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக, ரூபா 1,765,254 இற்கான தொகையினை மேற் கூறிய அமைச்சு, சபையில் இருந்து திருப்பி கேட்டிருந்தது. இந்த பிழையான கொடுப்பனவுகளை பொறுப்பானவர்களிடம் அறவீடு செய்து தீர்ப்பதற்கு அல்லது கணக்குகளின் மூலம் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மாவுஸ்ஸாவத்த கீழ் பகுதி பாதை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலையின் மதிப்பீட்டில் வேலை விடய இலக்கம் 02 இன் கீழ் பாதையின் மேற்பகுதியில் மண் போடப்பட்டு சமப்படுத்தி தகர்த்து அதன் மீது கொங்கிரீட் போடப்பட வேண்டும். எனினும், அவ்வாறு செயற்படாமல் தரைப் பகுதி கொங்கிரீட் பண்ணப்பட்டுள்ள போதும் அதற்காக ரூபா 79,936 தொகை தொழில்நுட்ப அலுவலர்களினால் பிழையான முறைக் கொடுப்பனவுகள் சான்றுபடுத்தப்பட்டுள்ளது.

(ஈ) கோமரய தோட்டம் விளையாட்டரங்கு நிர்மாணித்தல்

இந்த நிர்மாண வேலை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தாமதித்த நாட்கள் 202 இற்காக ரூபா 99,470 இற்கான தாமதக் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை.

(ii) பரிசோதனை நாள் வரை வேலை விடய இலக்கம் 01 முதல் 06 வரை விடயங்களைச் சேர்ந்த கொங்கிரீட் தூண்கள் (column) மற்றும் முதலாவது கொங்கிரீட் படை (slab) மட்டம் வரை நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அவை முறைப்படி வைக்கப்பட்டிருக்கவில்லை எனவும் தேன்கூடு போன்ற வெற்றிடங்கள் (honey comb) காணப்பட்டதுடன் அவற்றை சீமெந்து கலவை மூலம் மூடியிருக்கவில்லை. அவ்வாறு இருக்கும் போது ரூபா 490,000 இற்கான வேலைகளை சான்றுபடுத்தி, கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) வெளி நிறுவனங்களில் இருந்து சபைக்கு வழங்கியிருந்த நிதியங்களை செலவு செய்யும் போது, தேசிய பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் பிரிவு 3.9.1 இன் பிரகாரம் சனசமூக அடிப்படை அமைப்புக்களுக்காக நேரடியாக ஒப்பந்தங்கள் வழங்கும் போது ஏதேனும் குறிப்பிட்ட காலத்தில் ஒரு சங்கத்தினால் மேற்கொள்ளக் கூடிய மொத்த ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 03 இனை மிகைக்கக் கூடாது. அதே போல் கூட்டுப் பெறுமதி 02 மில்லியன் ரூபாவை மிகைக்கக் கூடாது. எனினும் அவ் ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 13,380,000 இற்கான 34 நிர்மாண வேலைகள் 09 சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 கூட்டிணைப்புத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 பெறுகைகள் திட்டம்

சபையினால் மீளாய்வாண்டின் போது ரூபா 56,902,077 இற்கு மூலதனச் செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்கான பெறுகைகள் திட்டமென்று தயாரித்திருக்கவில்லை.

4.3 அகக் கணக்காய்வு

மீளாய்வாண்டின் போது சபையில் அகக் கணக்காய்வு திட்டம் ஒன்று தயாரித்திருந்த போதிலும், போதியளவு கணக்காய்வு ஒன்று நடத்தியிருக்கவில்லை.

4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 06 வருமான விடயங்களில் நூற்றிற்கு 13 முதல் நூற்றிற்கு 69 வரையும், 08 செலவு விடயங்களில் நூற்றிற்கு 13 முதல் நூற்றிற்கு 100 இனை மிகைத்தும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்